**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 170/2025**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கதிரவன். | ஜாதி | |
| தந்தை பெயர் | சுப்பையா. | தொழில் | கன்சல்டன்சி. |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 37/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, தேனியில் குடியிருந்துகொண்டு, கன்சல்டன்சி வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். நான் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரி கடந்த 2023 ஆம் ஆண்டில் எனக்கு அறிமுகம் ஆனார். அவர் எனக்கு வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறினார். அவர் கூறியதன் அடிபப்டையில் கடந்த ஜீன்–2023 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல தவணைகளில் எதிரி சொன்ன வங்கிக் கணக்களில் ரூ.5,26,006/–ஐ அனுப்பினேன். பின்னர், எதிரி, எனக்கு வேலை வாங்கித் தரவில்லை. அவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, தொடர்பு கொள்ள முடியவில்லை. அதன்பின்னர், எதிரிமீது சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது, என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு நிலுவையிலிருந்தபோது, நானும், எதிரியும் சமாதானமாகிவிட்டோம். அந்த சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்றக் கேள்வி:** எதிரியிடமிருந்து எவ்வாறு பணத்தைப்

பெற்றுக்கொண்டீர்கள்?

**சாட்சியின் பதில்:–** எதிரியிடமிருந்து வங்கிப் பரிவர்த்தனை மூலம் ரூ.4,00,000/– ஏற்கனவே பெற்றுக்கொண்டேன். இன்று மீதித் தொகையான ரூ.1,26,100/–ஐ ரொக்கமாகக் கொடுத்துவிட்டார். எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன்.

**நீதிமன்றக் கேள்வி:–** எதிரி ஏமாற்றிய பின்பு ஏன் சமாதானமாக சென்றுவிட்டீர்கள்?

**சாட்சியின் பதில்:–** எனக்கு கிடைக்க வேண்டிய பணம் கிடைத்துவிட்டதால், நான் சமாதானம் ஆகிவிட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.08 18:00:21 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**